**மீரிகம பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீரிகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மீரிகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள்

மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் பந்தி 2.5 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்ற நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணப் பெறுமதி ரூபா 93,393,701 மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 இன் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அமுல்படுத்தப்படாத ரூபா 200,000 சபை நிதியத்தின் செயற்திட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டில் நிதி பெற்று கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 573,628 செயற்திட்டத்திற்குரிய கூட்டுமொத்தமான ரூபா 773,628 தொகை வேலைக் கடன் பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 இன் கணக்குகளில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் பிரகாரம் பெற வேண்டிய ஆதனவரி அதற்குரிய காலப் பகுப்பாய்வுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 49,316 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு | 2009 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு நடப்பாண்டில் ஆதனவரி அறவிடப் பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது புதிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளது. | புதிய ஆதன வரி வீதத்தின் பிரகாரம் ஆதனவரி அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | 1991 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட, தீர்க்கப்படாத 24 | தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முற்பண மீதிகளின் பெறுமதி ரூபா 5,407,708 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (இ) | 2020 திசம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் LGD/13/2016/(i) என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் (மேல் மாகாணம்) சுற்றறிக்கை | 02 கடைகள் உப வாடகைக்கு வழங்கியிருக்கும் போது வழங்குதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கடைகளை வாடகை உரித்தை கையளிக்கப் படுவதுடன் கடை முற்பணம் செலுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,416,743 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 62,390,419 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 15,018,493 | 9,641,896 | 9,641,896 | 7,129,899 | 14,817,700 | 12,178,416 | 13,073,421 | 7,327,151 |
| (ii) | வாடகை | 30,101,325 | 33,903,698 | 33,903,698 | 6,032,943 | 38,066,600 | 29,586,530 | 33,614,763 | 5,061,651 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,150,000 | 1,770,900 | 1,770,900 | 59,725 | 2,150,000 | 1,640,045 | 1,640,045 | 59,725 |
| (iv) | ஏனைய வருமானம் | 224,187,711 | 240,904,080 | 240,922,717 | 346,232 | 205,557,000 | 251,372,651 | 240,124,295 | 10,308,076 |
| | மொத்தம் | 271,457,529 | 286,220,574 | 286,239,211 | 13,568,799 | 260,591,300 | 294,777,642 | 288,452,524 | 22,756,603 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனவரியும் வரியும் | | |
| (i) | காலப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்ன் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி, 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 637,158 தொகையும், 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கிடையே ரூபா 3,277,459 தொகையும், 03 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கிடையிலான ரூபா 594,253 தொகையும், 01 வருடம் முதல் 03 வருடங்களுக்கிடையிலான ரூபா 1,059,329 தொகையும், 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 1,410,173 தொகையும் ஆக இருந்ததுடன் மொத்த நிலுவையில் 55 சதவீதம் ஒரு உப அலுவலகத்திற்குரியதாகும். | ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 7,244,396 ஆன நிலுவை ஆதனவரி மீதியில் அறவீடுகள் ரூபா 1,978,834 ஆனமையால் அறவீட்டின் வீதம் 27 சதவீதமும் மீளாய்வாண்டிற்குரிய சிட்டையிடல் பெறுமதி ரூபா 6,029,825 இல் அறவிடல் ரூபா 4,182,446 ஆனமையால் அறவிடல் வீதம் 69 சதவீதமாகவும் காணப்பட்டது. | மேற்படி | நிலுவை ஆதன வரி மற்றும் நடப்பாண்டின் ஆதனவரி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ஏக்கர் வரி மீதி ரூபா 38,426 தொகை ஆண்டில் அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 3,070 ஆனமையால் அறவிடல் வீதம் 8 சதவீதமும் ஆண்டிற்குரிய பெறுமதி ரூபா 40,440 மற்றும் அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 12,131 ஆனமையால் அறவிடல் வீதம் 30 சதவீதமாகவும் காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டில் மெய்மையாய்வு மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | நிலுவை ஏக்கர் வரிகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | நிலுவை வேலை நிர்மாண வரி மீதி ரூபா 44,330 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ள து. | நிலுவையாகவுள் ள நிர்மாண வரி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வாடகை | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி, 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கிடையே ரூபா 33,000 தொகையும், 03 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கிடையே ரூபா 217,500 தொகையும், 01 முதல் 03 வருடங்களுக்கிடையே ரூபா 1,563,650 தொகையும், 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 3,479,275 தொகையும் காணப்பட்டது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (ii) | நிலுவை இறைச்சிக்கடை மற்றும் மீன் கடை கேள்வி வாடகை மீதி ரூபா 262,084 தொகை 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் காணப்படுகின்றது. | மேற்படி | மேற்படி |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம்<br>2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகள் முதல் கிடைக்க வேண்டிய வியாபார அனுமதிப்பத்திர மீதி ரூபா 59,725 அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஏனைய வருமானம்<br>2019 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கப்பட்ட 31 கடைகளில் வியாபார நடவடிக்கைகள் நடாத்தப்படுகின்ற போதிலும் முற்கொடுப்பனவை அறவிட்டு உடன் படிக்கை செய்த பின்னர் கடைகளின் திறப்புக்கள் வழங்காமையின் காரணமாக நிலுவை முற்பண மீதி ரூபா 41,510,174 அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | உடன்படிக்கை செய்வதற்கும் முற்பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடை வாடகை அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 சனவரி 27 ஆம் திகதிய இலக்கம் 2264/18 என்ற அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் சபையின் மூலம் நடாத்தப்படுகின்ற சுடலைக் கூடம் தொடர்பாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்க வில்லை. | பெற்றுக் கொள்வதற்கு நடடிவக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலை கடன்பட்டோர் மீதி 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையே ரூபா 3,241,131 தொகையும், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 2,627,571 தொகையும், 01 முதல் 03 வருடங்களுக்கு இடையே ரூபா 631,026 தொகையும் காணப்பட்டது. | தீர்மானக் குழுவின் தீர்மானத்தைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதி தீர்த்து வைக்க்பபடல் வேண்டும். |
| (ஆ) | வேலைக் கடன்கொடுத்தோர் மீதி 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையே ரூபா 1,459,352 தொகையும், 03 இற்கும் 05 வருடங்களுக்கிடையே ரூபா 4,917,440 தொகையும், 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையே ரூபா 850,129 தொகையும் காணப்பட்டது. | மேற்படி | மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | புதிய சந்தை கடைத் தொகுதி தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு. | | |
| i. | 04 கடைகள் சபையின் அங்கீகாரமின்றி 9,186 சதுர அடியான அளவு அதிகரிக்கப்பட்டிருந்தது. | அங்கீகாரமின்றிய அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுமாறு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரமின்றிய அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுதல் வேண்டும். |
| ii. | கடைகளில் அதிகமான சதுர அடி அளவிற்காக ரூபா 1,672,270 அறவிடப்பட்டிருந்த போதும் உடன்படிக்கை திருத்தப்பட்டிருக்கவில்லை. | வாடகையாளருடன் மீண்டும் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அதிகரிக்கப்பட்ட சதுர அடி அளவிற்கு உடன்படிக்கை திருத்தப்படல் வேண்டும். |
| iii. | 05 கடைகளின் உடன்படிக்கை முடிவடைந்த போதும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்படும். | உடன்படிக்கை செய்யப்படல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மரணமடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற 04 ஊழியர்களிடம் இருந்தான கடன் மற்றும் முற்பண மீதி ரூபா 457,222 தொகை 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அறவிட வேண்டியிருந்தது. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் கடன் அறவிடப்படல் வேண்டும். |